13/08/2024

OS. No. 54/2017

பி.வா.சா.1. பழனி, த/பெ.வரதன்

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு எழுதப்படிக்க தெரியும். வழக்கு தாக்கல் செய்துள்ள ராஜி, கிருஷ்ணன், தர்மன் ஆகியோர்களை எனக்கு தெரியும். தாவா 5 அட்டவணை சொத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் ரோட்டிற்காக ஸ்டே கேட்டுள்ளனர். தாவா சொத்துக்கள் ஆதியில் 1944 ம் வருடம் கன்னி கவுண்டர் கிரையம் பெற்ற சொத்து என்றால் ஆமாம்.

கன்னி கவுண்டருக்கு பரசுராமன், சந்தியப்பன், நாகம்மாள், ஏழுமலை ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் ஆமாம். என் தந்தை வழி பாட்டனார் பெயர் பரசுராமன். தாவா 2 ஏக்கர் 59 செண்டிற்காக வழக்கு போடப்பட்டுள்ளது. என்னுடைய சொத்தின் சர்வே எண் 528 */2D, 528* /2E.

தாவா சொத்தை தவிர என் குடும்பத்திற்கு 3 ஏக்கர் சொத்து உள்ளது. தாவா சொத்துக்களில் இருந்து நான் கிரையம் பெற்ற சொத்து சுமார் 1 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலம் அனைத்து விவரமும் எனக்கு தெரியும்.

தாவா சர்வே எண் 528/2D க்கு வடபுறம் தான் மற்ற தாவா அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் ஆமாம். கன்னி கவுண்டர் இறந்த பிறகு அவருடைய வாரிசுகளான பரசுராமன், சந்தியப்பன், ஏழுமலை ஆகியோர்கள் மனபூர்வமாக ஏற்றுக்கொண்டதை தான் நான் குடும்ப ஏற்பாடு என்று பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன்.

மேற்சொன்ன கன்னி கவுண்டரின் 3 வாரிசுகள் பெயர்களை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. குடும்ப ஏற்பாடு என்று பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளதால் எந்த தேதியில் பிரித்துக்கொண்டார்கள் என்ற சொல்லிள்ளேனா என்றால் இல்லை. வாக்குமூலத்தில் கன்னி கவுண்டர் இறந்த பிறகோ அல்லது உயிருடன்

இருந்தபோதோ பிரித்துக்கொண்டார்கள் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் ஆமாம்.

கன்னி கவுண்டர் வாரிசுகள் எவ்வாறு சொத்துக்களை பிரித்துக்கொண்டார்கள் என்றும் யார் முன்னிலையில் பிரித்துக்கொண்டார்கள் என்றும் குறிப்பிட்டு வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். பரசுராமன் பெயருக்கு வந்த சொத்து ஆவணத்தினை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

உத்திரமேரூர் டு செங்கல்பட்டு சாலையில் வடபுறம் புறம்போக்கு இடம் அதன் பிறகு தான் என்னுடைய பட்டா இடம் என்றால் சரியல்ல. பட்டா இடத்தை ஒட்டிதான் சாலை உள்ளது. தாவா 12 ம் பிரதிவாதி குட்டியம்மாள் என்கிற குட்டாரின் வாரிசுகளுக்கு தாவா சொத்துக்களில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் ஆமாம்.

நான் தனியாக கிரையம் பெற்ற சொத்திற்கு ஆறுமுகம் என்பவரின் நிலத்தின் வழியாக தான் சென்று என் நிலத்திற்கு செல்லவேண்டும். தாவா சொத்தின் சர்வே எண் 528 வடபுறம், கிழ்புறம், மேல்புறம் பல ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளது என்றால் ஆமாம். என் தகப்பனார் வரதன் என்பவருடைய வாரிசு சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பரசுராமன் இறந்த தேதியும் எனக்கு தெரியாது அவருடைய வாரிசு சான்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

(வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)